பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**09 07 2026** **7 15**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆஸ்திரேலியா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி இருநாட்டு வருடாந்திர உச்சிமாநாட்டில் பங்கேற்க உள்ளார்.

2. விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான நடவடிக்கைகளில் மத்திய அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. மேற்காசியாவில் நிலவும் பதற்றத்தை களைய அமெரிக்காவும், ஈரானும் தொடர்ந்து பேச்சுகளில் ஈடுபட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

4. ஈரானுக்கு எதிரான அமெரிக்க ராணுவ நடவடிக்கையில் பல்வேறு முக்கிய நேட்டோ கூட்டமைப்பு நாடுகள் ஆதரவளிக்க மறுத்துவிட்டதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

5. நாட்டின் 98வது செஸ் கிராண்ட் மாஸ்டர் என்ற பெருமையை கன்னியாகுமரியைச் சேர்ந்த 17 வயதான அஸ்வத் பெற்றுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஆஸ்திரேலியாவில் மூன்று நாள் பயணம் மேற்கொள்ளும் பிரதமர் திரு. நரேந்திர மோடி அங்கு நடைபெறும் இந்தியா-ஆஸ்திரேலியா வருடாந்திர உச்சிமாநாட்டில் பங்கேற்க உள்ளார்.

அந்நாட்டுப் பிரதமர் திரு. ஆண்டனி அல்பனீஸ் உடன் மெல்போர்னில் இன்று இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

அப்போது இரு நாடுகளுக்கிடையே வர்த்தகம், பாதுகாப்பு, முக்கிய தொழில்நுட்பங்கள், கல்வி, இருநாட்டு மக்களுக்கு இடையேயான உறவுகள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விவாதிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பயணத்தின்போது இரு நாட்டு முன்னணி வர்த்தக தலைவர்களுடன் அவர் உரையாட உள்ளார்.

அத்துடன் தலைமைச் செயல் அதிகாரிகள் கூட்டத்தில் பிரதமர் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. நரேந்திர மோடி, ஆஸ்திரேலியா பிரதமருடனான சந்திப்பை தாம் ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக கூறியுள்ளார்.

அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினருடன் தாம் உரையாட வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மெல்போர்னில் தமக்கு சிறப்பான வரவேற்பளித்த இந்திய வம்சாவளியினருக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான நடவடிக்கைகளில் மத்திய அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற வேளாண் தலைமைத்துவ மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், குறைந்தபட்ச ஆதரவு விலை, விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின்கீழ் பொருளாதார உதவி, பயிர்க் காப்பீட்டுத் திட்டம், உரங்களுக்கான மானியம் போன்ற முன் முயற்சிகள் மூலம் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும், தற்சார்புடையவர்களாக மாற்றவம் அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

இளைஞர்கள் தங்களுடைய புதுமைக் கண்டுபிடிப்பு, திறன்கள் மற்றும் தொழில்முனைவு மூலம், வேளாண் முறையை கட்டமைக்க

பங்களிப்பு செய்ய வேண்டும் என்று திரு. ராஜ்நாத் சிங் அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

மேற்காசியாவில் நிலவும் பதற்றங்கள், அண்மையில் நடைபெற்ற தாக்குதல்கள் கவலையளிப்பதாக இந்தியா கூறியுள்ளது.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதுபோன்ற நிகழ்வுகள் அப்பகுதியில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் என்று கூறியுள்ளது.

இதையடுத்து அனைத்து தரப்பினரும், பதற்றத்தை தணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

மக்களின் பாதுகாப்பையும், தடையற்ற எரிசக்தி விநியோகம் மற்றும் வர்த்தகப் போக்குவரத்தை உறுதி செய்யுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மோதலை முடிவுக்கு கொண்டுவர பேச்சுகள் மூலம் தீர்வு காண வேண்டும் என்று இந்தியா வலியுறுத்துவதாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

பிரிக்ஸ் நாடுகளின் பெண் அமைச்சர்கள் பங்கேற்றுள்ள இரண்டு நாள் கூட்டம் நேற்று கொச்சியில் தொடங்கியது.

மத்திய பஞ்சாயத்ராஜ் அமைச்சகம் இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளது.

முன்னதாக மகளிருக்கு அதிகாரமளித்தல் மற்றும் முக்கிய பிரச்சினைகள் குறித்து அமைச்சர்கள் விவாதித்தனர்.

கூட்டத்தின் நிறைவு நாளான இன்று பிரிக்ஸ் அமைச்சர்களின் கூட்டுத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தில் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கட்டணமில்லா சுகாதாரத் திட்டத்தை அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.

வாரணாசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இதன் மூலம் 15 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு 5 லட்சம் ரூபாய் வரையிலான மருத்துவக் காப்பீடு கிடைக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஆசிரியர்கள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு சமூக பாதுகாப்புக்காக பாரத ஸ்டேட் வங்கியுடன் உத்தரப்பிரதேச அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<>>>>

ஈரானுக்கு எதிரான அமெரிக்க ராணுவ நடவடிக்கையில் பல்வேறு முக்கிய நேட்டோ கூட்டமைப்பு நாடுகள் ஆதரவளிக்க மறுத்துவிட்டதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

துருக்கி தலைநகர் அங்காராவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஐரோப்பாவிற்கு பல ஆண்டுகளாக அமெரிக்கா பாதுகாப்பு உத்தரவாதங்களை அளித்திருந்த நிலையிலும் நேட்டோ நாடுகளின் செயல் தம்மை ஏமாற்றமடையச் செய்ததாகத் தெரிவித்தார்.

ஜெர்மனி, ஃபிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி உள்ளிட்ட பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் தாம் பேசிய நிலையில்

நேட்டோவின் சில நாடுகள் மட்டுமே அமெரிக்காவுக்கு ஆதரவளித்ததாக திரு. ட்ரம்ப் குறிப்பிட்டார்.

<<<<>>>>

கேரளாவில் மலப்புரம், கோழிக்கோடு, வயநாடு, கண்ணூர், காசர்கோடு ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடலோரப் பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கேரளத்தில் நாளை முதல் மழை பொழிவு குறையக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அந்த மையம் கூறியுள்ளது.

உத்தராகண்ட் மாநிலத்தில் டேராடூன், ஹரித்வார், உத்தம்சிங் நகர், நைனிடால், சம்பாவத் ஆகிய மாவட்டங்களில் அடுத்த 36 மணி நேரத்திற்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

டேராடூன் மற்றும் பல்வேறு பகுதிகளில் நேற்றிரவு தொடர்ந்து கனமழை பெய்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மழை காரணமாக அங்கு அனைத்துப் பள்ளிகளுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மிசோரமில் கடந்த 2 நாட்கள் பெய்த காரணமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

வீடுகள் சேதமடைந்து தகவல் தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

குஜராத்தில் பெய்த மழையினால் சூரத், **Tapi,** நவ்சாரி மாவட்டங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அங்கு நிலவும் சூழ்நிலைகள் குறித்து குஜராத் முதலமைச்சர் திரு. பூபேந்தர் பட்டேலை தொடர்பு கொண்டு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கேட்டறிந்தார்.

மாநிலத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று அப்போது அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழக விவசாயிகளிடமிருந்து கொப்பரை மற்றும் தோட்டாபுரி மாம்பழங்களை கொள்முதல் செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக அரசு சமர்ப்பித்த

பரிந்துரையின் அடிப்படையில் இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து தமிழகத்தில் **87** ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கும் மேற்பட்ட கொப்பரை கொள்முதல் செய்யப்படும்.

அத்துடன் **96** ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான தோட்டாபுரி மாம்பழங்களை கொள்முதல் செய்வதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டின் **98**வது செஸ் கிராண்ட் மாஸ்டர் என்ற பெருமையை தமிழகத்தின் கன்னியாகுமரியைச் சேர்ந்த **17** வயதான அஸ்வத் பெற்றுள்ளார்.

புனே சர்வதேச கிராண்ட் மாஸ்டர் **Round Robin** போட்டியின் இறுதிச் சுற்றில் அமெரிக்காவின் கண்ணன் வைத்தியநாதனை தோற்கடித்து கிராண்ட் மாஸ்டர் தகுதிக்கான புள்ளிகளை அஸ்வத் பெற்றார்.

---------------

ஆஸ்திரியா அணிக்கு எதிரான **21** வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாவது மற்றும் இறுதி ஹாக்கிப் போட்டியில் இந்தியா **4-1** என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

-------------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான **4**வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

**Bristol-**ல் நடைபெற உள்ள இப்போட்டி இரவு **10** மணிக்கு தொடங்குகிறது.

**5** போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இங்கிலாந்து **2-1** ஆட்டக் கணக்கில் முன்னிலையில் உள்ளது.

--------------

**23** வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் **9** வீராங்கனைகள் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இந்தோனேஷியாவின் ஜகார்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதிச் சுற்றில் **51** கிலோ எடைப்பிரிவில் தனு, **54** கிலோ எடைப்பிரிவில் நிஷா, **57** கிலோ எடைப்பிரிவில் **Prachi, 60** கிலோ எடைப்பிரிவில் நிகிதா சந்த், **65** கிலோ எடைப்பிரிவில் காஜல்,

**70** கிலோ எடைப்பிரிவில் ஷிவானி, **75** கிலோ எடைப்பிரிவில் முஸ்கான், **80** கிலோ எடைப்பிரிவில் **Naina, Priyanka** ஆகியோர் வெற்றி பெற்றனர்.

இதன்மூலம் இந்தியாவுக்கு **9** பதக்கங்கள் கிடைப்பது உறுதியாகியுள்ளது.

---------------

பெல்ஜியத்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவர், **7-6, 7-6** என்ற செட் கணக்கில் ஆஸ்திரியாவின் **Sandro Kopp**-ஐ வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Madhwin Kamath - Atharva Sharma** இணை காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**<<<<The End>>>>**